தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தென் கடலோர தமிழகத்தில் பலத்த மழைக்கு வாய்ப்பு

தென் கடலோர தமிழகத்தில், செவ்வாய்க்கிழமை ஆங்காங்கே பலத்த மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியதாவது: வங்கக் கடலின் தென்மேற்கு பகுதியில், ஞாயிற்றுக்கிழமை புதிதாக குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது. தற்போது, இந்தக் காற்றழுத்தத் தாழ்வு நிலையானது மேற்கு நோக்கி நகர்ந்து, இலங்கையை ஒட்டியுள்ள வங்கக் கடலில் நிலை கொண்டுள்ளது. முன்னறிவிப்பு: தென் கடலோர தமிழகத்தில், அடுத்த 24 மணி நேரத்தில் ஆங்காங்கே பலத்த மழை பெய்யும். அதே நேரத்தில், வட தமிழகம், புதுச்சேரியில் ஆங்காங்கே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னையைப் பொருத்தமட்டில் வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். அடுத்து வரும் நான்கு நாள்களில் மழை அதிகரிக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

### ராசிபுரத்தில் ரூ.37 லட்சத்துக்கு பருத்தி ஏலம்

ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் திங்கள்கிழமை நடந்த ஏலத்தில் ரூ.37 லட்சத்துக்கு பருத்தி ஏலம் போனது. ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் சார்பில் கவுண்டம்பாளையம் குடோனில் பருத்தி ஏலம் நடந்தது. பல்வேறு மாவட்டங்களில் இருந்து 20-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். டெண்டர் முறையில் ஏலம் நடைபெற்றது. சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம், வடுகம், நாமகிரிப்பேட்டை, தொப்பப்பட்டி, வடுகம் முனியப்பம்

பாளையம், புதுப்பட்டி, சந்திரசேகரபுரம், குருசாமிபாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு ஊர்களிலிருந்து 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் 2509 மூட்டை பருத்தியைக் கொண்டு வந்திருந்தனர். இதில் டி.சி.ஹெச். ரகம் குவிண்டால் அதிக பட்சமாக ரூ.4756-க்கும், குறைந்த பட்சமாக ரூ.4191-க்கும் ஏலம் போனது. ஆர்.சி.ஹெச். ரகம் குவிண்டால் அதிகபட்சமாக ரூ.4559-க்கும் குறைந்த பட்சமாக ரூ.3 619க்கும் ஏலம் போனது. ஒரே நாளில் ரூ.37 லட்சத்துக்கு பருத்தி ஏலம் போனது. திருச்செங்கோடு, அன்னூர், அவிநாசி, திருப்பூர், சேலம், ஆத்தூர் ஆகிய ஊர்களைச் சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டு பருத்தி மூட்டைகளை ஏலத்தில்எடுத்தனர்.

**<u>யானையால் பயிர் சேதமடைந்த விவசாயிகளுக்கு ரூ.1.44 லட்சம் இழப்பீடு</u>**

கிருஷ்ணகிரி மாவட்டத்தில், காட்டு யானைகளால் பயிர் சேதம் அடைந்த 23 விவசாயிகளுக்கு ரூ.1.44 லட்சம் இழப்பீட்டுத் தொகையை மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் வழங்கினார். ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமையில் மக்கள் குறை தீர் கூட்டம் திங்கள்கிழமை நடைபெற்றது. சாலை வசதி, கல்விக் கடன், விலையில்லா சலவைப் பெட்டி, தையல் இயந்திரம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட 328 மனுக்கள் பெறப்பட்டன. இந்த மனுக்களைப் பரிசீலனை செய்து தகுதியானவர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கும்படி சம்பந்தப்பட்ட அலுவலர்களை மாவட்ட ஆட்சியர் கேட்டுக் கொண்டார். காட்டு யானைகளால் பயிர் சேதமடைந்த 23 விவசாயிகளுக்கு ரூ.1.44 லட்சம் இழப்பீட்டுத் தொகையை மாவட்ட ஆட்சியர் வழங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் ப.பாலசுப்பிர மணியன், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் மந்திராசலம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## <u>பருத்தியில் செவ்விலைகுறைபாட்டை நீக்க வேளாண் துறை யோசனை</u>

பருத்தியில் செவ்விலை குறைபாட்டை நீக்கினால் கூடுதல் மகசூல் பெறலாம் என்றார் வேளாண்மை இணை இயக்குநர் வே. அழகிரிசாமி. இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெரம்பலூர் மாவட்டத்தில் 40 ஆயிரம் ஹெக்டேருக்கும் கூடுதலாக பருத்தி பயிரிடப்பட்டுள்ளது. தற்போது நிலவி வரும் தட்பவெப்ப நிலையால், ஒருசில இடங்களில் பருத்தியின் வளர்ச்சி குறைந்து காணப்படுகிறது. மேலும், மெக்னீசியம் மற்றும் போரான் நுண்சத்து குறைபாடுகள் தோன்றி, பருத்திச் செடியின் அடிப்பகுதியில் உள்ள முதிர்ந்த இலைகள் சிவந்து காணப்படுகிறது. இந்தக் குறைபாட்டால் மகசூல் இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இந்தக் குறைபாட்டை சரிசெய்ய 1 டேங்க் (அல்லது) 10 லிட்டர் நீருக்கு மெக்னீசியம் சல்பேட் 100 கிராம், 10 கிராம் ஜிங்க் சல்பேட், 50 கிராம் யூரியா, 10 கிராம் போராக்ஸ் என்ற அளவில், இவற்றுடன் 10 மில்லி ஒட்டும் திரவத்துடன் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் இரண்டு முறை தெளிக்க வேண்டும். மேலும், மழைநீர் தேங்கி வளர்ச்சி குன்றிய இடங்களில் நீரில் கரையும் உரம் 1 டேங்குக்கு 100 கிராம் 19:19:19 உரம் அல்லது 13:00:45 (மல்டி-கே) தெளித்து, பருத்தியில் கூடுதல் வருவாய் பெறலாம்.

## <u>விவசாயிகளுக்கு பயிர்க்காப்பீட்டு தொகை வழங்க கோரிக்கை</u>

சிவகங்கை மாவட்ட பார்க்கவ குல முன்னேற்ற சங்க கூட்டம் தேவகோட்டையில் நடைபெற்றது. இந்திய ஜனநாயக கட்சியின் மண்டல தலைவர் குழந்தைசாமி தலைமை வகித்தார். பார்க்கவ குல மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ஆசைத்தம்பி முன்னிலை வகித்தார். மாவட்டச் செயலாளர் அழகுமணி வரவேற்றார். மாவட்டத் தலைவர் ராமன் விளக்கவுரையாற்றினார். கூட்டத்தில், சிவகங்கை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு உரிய பயிக்க்காப்பீட்டுத் தொகையை பெற்றுத்தர

தமிழக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். கிராமங்கள் தோறும் சங்க கிளைகள் அமைக்க வேண்டும். ஆண்டு தோறும் ரூசோ பிறந்த நாளை சங்கம் சார்பில் கொண்டாடுவது உள்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட பொருளாளர் அருள்சாமி நன்றி கூறினார்.

**"நிகழ் பருவத்தில் பருத்தி உற்பத்தி 400 லட்சம் பொதிகள்'**

2014-15-ஆம் ஆண்டுக்கான பருத்தி பருவத்தில் (அக்டோபர் முதல் செப்டம்பர் வரை) பருத்தி உற்பத்தி 400 லட்சம் பொதிகளாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளதாக மாநிலங்களவையில் மத்திய ஜவுளித் துறை இணை அமைச்சர் சந்தோஷ் குமார் கங்வார் தெரிவித்தார். இது தொடர்பாக மாநிலங்களவையில் அதிமுக உறுப்பினர் டி. ரத்தினவேல் எழுப்பியிருந்த கேள்விக்கு எழுத்துப்பூர்வமாக வெள்ளிக்கிழமை அளித்த பதிலில் அமைச்சர் இதைத் தெரிவித்துள்ளார். மேலும், பருத்தி சாகுபடி யாளர்கள் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு இந்திய பருத்தி நிறுவனம் (சிசிஐ) குறைந்தபட்ச ஆதரவு விலையின்படி பருத்தியைக் கொள்முதல் செய்யத் தொடங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பரோடா முருங்கை கிலோ ரூ.200**

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் பரோடா முருங்கைக்காய் ஒரு கிலோ ரூ.200 க்கு விற்றது. ஒட்டன்சத்திரம், தாராபுரம் பகுதிகளில் முருங்கைக்காய் அதிகமாக பயிரிடப்படுகிறது. சீசன் இல்லாததால், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் உள்ளூர் முருங்கை வரத்து நாளுக்குநாள் குறைந்து கொண்டே வந்தது. ஆனால் முகூர்த்த சீசன், ஐயப்பன் சீசன் காரணமாக இதன் பயன்பாடு அதிகரித்தபடி

இருந்தது. இதனால் முருங்கை விலை கிடு கிடு வென அதிகரித்தது. அன்றாடத் தேவையை சமாளிக்கும் அளவிற்கு உள்ளூர் வரத்து இல்லை. பற்றாக்குறையை போக்க குஜராத் மாநிலம் பரோடாவில் விளைவிக்கப்பட்ட முருங்கை, லாரிகள் மூலம் இங்கு கொண்டு வரப்படுகிறது. பரோடா முருங்கை தரமாக இருப்பதால் உள்ளூர் முருங்கை விலைக்கும், இதற்கும் பெரிய வித்தியாசம் காணப்படுகிறது. உள்ளூர் முருங்கை கிலோ ரூ.110க்கு விற்ற போதிலும், பரோடா முருங்கை கிலோ ரூ.200க்கு விற்றது. உள்ளூர் வரத்து முற்றிலும் இல்லாத போது, இதன் விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## ரூ. 37 லட்சம் பருத்தி ஏலம்

ராசிபுரம்:ராசிபுரம், வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) கவுண்டம்பாளையம் குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 2,509 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர்.டி.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,756, குறைந்த பட்சமாக, 4,191, ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,559, குறைந்த பட்சமாக, 3,619 ரூபாய்க்கு ஏலம் போனது.வியாபாரிகள் பருத்தியை, 37 லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுத்து சென்றனர்.

## மானியத்தில் வீரிய ரக காய்கறி விதைகள் வழங்க மாவட்ட கலெக்டர் அறிவுறுத்தல்

கரூர்: "உயர் விளைச்சல் மற்றும் வீரிய ரக காய்கறி விதைகளை, விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க, தோட்டக்கலை துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்," என்று கரூர் மாவட்ட கலெக்டர்

ஜெயந்தி, வேளாண் அலுவலர்களுக்கு வலியுறுத்தினார். காய்கறி குழு வளர்ச்சித்திட்ட விளக்கக் கூட்டம், கரூர் கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நடந்தது. கூட்டத்தில், கரூர் மாவட்டத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித்திட்டத்தில், பெருநகர காய்கறி உற்பத்திக்குழு வளர்ச்சித்திட்டம், 117.35 லட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ளது. இத்திட்டத்துக்காக, கரூர் மாவட்டத்தில், 8 தாலுக்காக்களிலும், 15 முதல் 20 விவசாயிகளைக் கொண்ட, 50 குழுக்கள் அமைக்கப்பட உள்ளது. திறந்த வெளியில் உயர் விளைச்சல் ரக காய்கறி பயிர்கள், 40 ஹெக்டேர் பரப்புக்கும், வீரிய ஒட்டு ரக காய்கறி சாகுடி, 140 ஹெக்டேர் பரப்புக்கும், குழுவில் உள்ள விவசாயிகளுக்கு, தோட்டக்கலைத் துறை மூலம் மானியம் வழங்கப்படும்.இக்குழு உற்பத்தி செய்த காய்கறிகளை, கரூர் மாவட்டத்தில் ஐந்து, இடங்களில் உள்ளூர் விற்பனை நிலையம் அமைத்து சில்லரை விற்பனை செய்தது போக, மீதியுள்ள காய்கறிகளை, திருச்சியில் உள்ள காந்தி தினசரி காய்கறி அங்காடிக்கு குழுவினரே எடுத்துச் சென்று மொத்த விற்பனை செய்வதற்கும், வங்கி நிதி உதவியுடன் வேன் வாங்க மானியமும் வழங்கப்படும். குழு உறுப்பினர் களை மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம் ஆகிய துறை கண்காணிப்பாளர்களுடன், தோட்டக்கலை களப்பணியாளர்களும் இணைந்து தேர்வு செய்ய வேண்டும். இத்திட்டம் வெற்றியடைய உயர் விளைச்சல் மற்றும் வீரிய ரக காய்கறி விதைகளை, விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க, தோட்டக்கலை துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.எனவே, இத்திட்டத்தில்இணைந்து காய்கறி பயிர்கள் சாகுபடி செய்ய விருப்பம் உள்ள விவசாயிகள், சம்மந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு கலெக்டர் ஜெயந்தி கூறினார்.கூட்டத்தில் டி.ஆர்.ஓ., அருணா, வேளாண்மை இணை இயக்குனர் தெய்வேந்திரன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் சந்தானம், மாவட்ட

முன்னோடி வங்கி மேலாளர் முருகேசன், திருச்சி மாவட்ட வேளாண் விற்பனைக்குழு ஆய்வாளர் குமாரசாமி, கரூர் ஆர்.டி.ஓ., கார்த்திகேயன், மாவட்ட மகளிர் திட்ட அலுவலர் லட்சுமணன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் செந்தமிழ்ச்செல்வி, மற்றும் அனைத்து வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் பங்கேற்றனர்.

## <u>செட்டிக்குளத்தில் 34 டன் வெங்காயம் விற்பனை</u>

பெரம்பலூர்: செட்டிகுளம் வெங்காய வணிக வளாகத்தில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்தறையின் மூலம் திறந்த முறை ஏலம் நடந்தது.ஏலத்துக்கு, 22 வியாபாரிகள், 549 மூட்டை (34,396 கிலோ) வெங்காயத்தை ஏலத்தில் எடுத்தனர். சின்ன வெங்காயம் அதிகபட்சம் கிலோ, 52 ரூபாய்க்கும் சராசரியாக ஒரு கிலோ, 23 ரூபாய்க்கும் விற்பனையானது. இதன் மூலம், ஏழு லட்சத்து, 85 ஆயிரத்து. 634 ரூபாய்க்கு விற்பனை நடந்தது. விவசாயிகளுக்கு பணம் உடனடியாக வழங்கப்பட்டது.இவ்வணிக வளாகத்தில் வாரந்தோறும் செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஏலம் நடக்கும்.

## <u>கறவை மாடுகள் விலை அதிகரிப்பு</u>

ஒட்டன்சத்திரம் : கால்நடை தீவன தட்டுப்பாடு குறைந்ததால் ஒட்டன்சத்திரம் மாட்டுச்சந்தையில் கறவை மாடுகளின் விலை ரூ.10 ஆயிரம் முதல் ரூ.20 ஆயிரம் வரை அதிகரித்துள்ளது. ஒட்டன்சத்திரம் நகராட்சி சார்பில் வாரம் தோறும் திங்களன்று மாட்டுச்சந்தை கூடுகிறது. திண்டுக்கல்மட்டுமின்றி பக்கத்து மாவட்டங்களான திருச்சி, தேனி, திருப்பூர், கோவை பகுதிகளில் இருந்தும் மாடுகள் விற்பனைக்கு வருகிறது. இவற்றை விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் வாங்கிச் செல்வர். கடந்த 2 ஆண்டுகளாக இப்பகுதியில் மழை சரிவர பெய்யாமல் போனதால் குடிநீருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டது. வறட்சி காரணமாக தீவனத் தட்டுப்பாடு, தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டதால், விவசாயிகள் பல ஆண்டுகளாக வளர்த்து வந்த கறவை மாடுகளை மிகக் குறைந்த

விலைக்கு விற்று விட்டனர். இந்நிலையில் சமீபத்தில் பெய்த மழை காரணமாக கிணறுகளுக்கு நீர்வரத்து இல்லை என்ற போதிலும் மானாவாரியாக போடப்பட்ட மக்காச்சோளம், வெள்ளைச் சோளம் முளைத்துள்ளதால் கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மறுபடியும் கறவை மாடுகளை வாங்கி வளர்க்க ஆர்வம் காட்டி வருகின்றனர். வறட்சி காரணமாக கடந்த ஓராண்டில் அதிக எண்ணிக்கையிலான மாடுகள் மற்றும் கன்றுகளை கேரள வியாபாரிகள் கறிக்காக வாங்கிச் சென்று விட்டனர். இதனால் மாட்டுச் சந்தையில் குறைந்த அளவிலான மாடுகளே விற்பனைக்கு வந்தன. மழை பெய்வதற்கு முன்பு இருந்த விலையை காட்டிலும் தற்போது கறவை மாடுகளின் விலை ரூ.10 ஆயிரத்திலிருந்து ரூ.20 ஆயிரம் வரை அதிகரித்துள்ளது. விவசாயி திருமூர்த்தி கூறுகை யில்,"கன்றுகுட்டிளின் விலை ரூ.5 ஆயிரம் வரை அதிகரித்துள்ளது. ரூ.30 ஆயிரத்திற்கு விற்கப்பட்ட கறவை மாடுகள் தற்போது ரூ.40 ஆயிரத்திற்கும் அதிகமாக விலை போகிறது," என்றார்.

## அணைகளின் நீர்மட்டம்

தேனி : தேனி மாவட்டத்தில் உள்ள அணைகளின் நீர் மட்டம் விபரம்: வைகை 39.17 அடி (மொத்தம் 71அடி), நீர் வரத்து 1336 கனஅடி, நீர் திறப்பு 2060 கனஅடி. மஞ்சளாறு 46.45 (57) அடி, நீர் வரத்து 34 கன அடி, வெளியேற்றம் 90 கனஅடி. சேத்துப்பாறை 125.62 (126.28) அடி, நீர் வரத்து 10 கன அடி, வெளியேற்றம் 15 கனஅடி. சண்முகாநதி 45.70, நீர் வரத்து 3 கனஅடி,வெளியேற்றம் 14.47 கனஅடியாக உள்ளது.

## குதிரைவாலி சாகுபடி ஆய்வு

முதுகுளத்தூர் : முதுகுளத்தூர் அருகே கீழக்குளத்தில் 5 ஏக்கர் பரப்பளவில், கோ- 2 ரக குதிரை வாலி செயல்விளக்க திடல்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒரு ஏக்கரில், கீழக்குளம் விவசாயி

தாயம்மாள், நடவு செய்துள்ள கோ 2 ரக குதிரைவாலி பயிர்களை ஆய்வு செய்த மாவட்ட வேளாண் திட்ட முனைப்பு அலுவலர் உதுமான் முகைதீன் கூறியதாவது: பயிர்களை வரிசையாக நடவு செய்வதால், களை எடுத்தல், உரமிடுதல், அறுவடை எளிதாகும்., மகசூல் அதிகரிக்கும்," என்றார். ஆய்வில் வட்டார தொழில் நுட்ப மேலாளர் ஹேமலதா, அய்யப்பன், ஜெயக்கண்ணன் பங்கேற்றனர்.

## சோளம் பயிரிடுதல் பயிற்சி

பரமக்குடி : பரமக்குடியில் மக்காச்சோளம் பயிரிடுதல் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது. வேளாண் உதவி இயக்குனர் கண்ணையா பேசியதாவது: சிறுதானியங்களில் மக்காச்சோளம் குறைந்த நீரில் அதிக மகசூல் தரக்கூடியது. ஏக்கருக்கு 10 கிலோ விதை, வீரிய ஒட்டு ரகங்களுக்கு 8 கிலோ விதை போதுமானது. 95 முதல் 105 நாட்களில் ஏக்கருக்கு மானாவாரியில் 2 முதல் 2.5 டன் மகசூல் பெறலாம். கால்நடை, கோழித்தீவனமாக பயன்படுகிறது. இதன் மூலம் ரூ. 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் வரை வருமானம் பெறலாம். இத்திட்டத்தில் ஏக்கருக்கு செயல்விளக்கம் அமைக்க ரூ. 2 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது, என்றார்.

## குமரி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரிப்பு

நாகர்கோவில் : கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு மாதம் இடைவிடாது பெய்த மழைக்கு பின்னர் கடந்த சில நாட்களாக கடும் வெயில் அடித்தது.இந்நிலையில் கடந்த இரண்டு நாட்களாக மாவட்டத்தில் ஆங்காங்கே சாரல் மழை பெய்து வருகிறது. குறிப்பாக அணை பிடிப்பு பகுதிகளில் சாரல் மழை பெய்வதால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பெருஞ்சாணி அணைக்கு 151 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில் நேற்று காலை இது 313 கன அடியாக அதிகரித்தது. 77 அடி கொள்ளவு கொண்ட இந்த அணையின் நீர்மட்டம்

தற்போது 75.50 அடியாக உள்ளது. பேச்சிப்பாறை அணை நீர் மட்டம் 45.28 அடியாக உள்ளது. இதுபோல சிற்றாறு அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்துள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வாழையில் வாடல் நோய் தாக்குதலால் மகசூல் இழப்பு கட்டுப்படுத்த ஆராய்ச்சி மையம் வழிகாட்டல்**

திருச்சி,: தமிழகம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருவதால் பெரும்பாலான வாழை வயல்களில் மழைநீர் தேங்கி இருப்பதோடு காற்றின் ஈரப்பதம் அதிகரித்துள்ளது. மேலும் பனிப்பொழிவு தொடங்கி இருப்ப தால் வாழையில், வாடல் நோய் மற்றும் இலைப்புள்ளி என்ற மட்டைக் காய்ச்சல் நோய் மிக அதிக மாகி மகசூல் இழப்பு ஏற்ப டும் வாய்ப்பு அதிகமாகியுள்ளது. வாடல் நோய், ரஸ் தாளி, நெய்பூவன், மொந் தன், கற்பூரவள்ளி உள் ளிட்ட ரக வாழைப்பயி ரில் மிக அதிக சேதத்தை ஏற்படுத்துகிறது. நடவு கன் றுகள், மண் மற்றும் தண் ணீர் மூல மாக பரவக்கூடிய இந்நோயானது, மழைத் தண்ணீர் 2 அல்லது 3 நாட் கள் வாழை வயல்களில் தேங் கும் பொழுது வாழை வேர் கள் பாதிக்கப் படுகிறது. இதனால் மரங்களின் இலை கள் முழுவதும் வாடி, பெரும் மகசூல் இழப்பு ஏற் பட வாய்ப்புகள் அதிகமாக உள்ளது. இது குறித்து திருச்சி தேசிய வாழை ஆராய்ச்சி மைய இயக்குனர் முஸ்தபா கூறுகை யில், இந்நோயை கட்டுப்படுத்த முதலில் வயல்களில் தேங்கியுள்ள தண்ணீர் முழுவதையும் வடி கட்டத் தேவையான, வடி கால் வசதி களை உடனடி யாக ஏற்படுத்த வேண்டும். பின்னர் கார்பென்டா சிம் மருந்தை, ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் என்ற அளவில் கரைத்து, அனை த்து வாழை மரங்களு க்கும், ஒரு மரத்திற்கு 2 அல் லது 3 லிட்டர் மருந்து கலவை என்ற அளவில், ஒரு மாத இடை வெளியில், 2அல்லது 3 முறை மரத்தைச் சுற்றி ஊற்ற வேண்டும். இது வாழை இலைகளில் அதிகப்படி

யான புள்ளி களை ஏற்படுத்தி, காய்கள் வளர்ச்சி அடைவதற்கு மிகவும் தேவையான பச்சை இலை களின் எண்ணிக்கை குறைப்பதால், 50 சதவீதத்திற்கும் மேலான மகசூல் இழப்பை ஏற்படுத்துகிறது. இந்நோயை மிக எளி தாக கட்டுப்படுத்த அவ்வப்போது இலைப்புள்ளி நோய் தாக்கப்பட்ட அடி இலைகளை நீக்கி, உடன் தீ வைத்து அழிக்க வேண் டும். 20 நாட்களு க்கு ஒரு முறை மரத்தின் அனை த்து இலைகளி லும் மற்றும் இலைக ளின் மேல் மற் றும் கீழ்ப்புறம் நன்கு நனையு மாறு தெளிக்க வேண்டும். ஒரு லிட்டர் தண்ணீரில் கலக்க வேண் டிய மருந்துகளில், முதல்தெளிப்பில் பனோல் எண் ணெய் 10மில்லி மற்றும் புரோப்பிகோனசோல் 1 மில்லியும், 2வது தெளிப்பு பனோல் எண் ணெய் 10 மில்லி மற்றும் கார்பென்டாசிம் 1கிராம்,3ம் தெளிப்பு பனோல் எண்ணெய் 10மில்லி மற்றும் நேட்டிவோ 1கிராம், 4ம்தெளிப்பு பனோல் எண்ணெய் 10 மில்லி மற்றும் புரோப்பி கோனசோல் 1 மில்லி, 5ம் தெளிப்பில் பனோல் எண் ணெய் 10 மில்லி மற்றும் கம்பேனியன் 1கிராம் ஆகும். இதை கடைபிடிப்பதன் மூலம், வாழையில் வாடல் மற்றும் இலைப் புள்ளி நோய்களை கட்டுப்படுத்தி அதிக லாபம் பெறலாம் என்றார்.

## பயறு மகசூலை அதிகரிக்க பின்பற்ற வேண்டிய வழிமுறை

திண்டுக்கல், : பயறு சாகுபடியில் அதிக மகசூ லை பெறுவதற்கு வேளாண் அதிகாரிகள் தெரிவித்து ள்ள தொழில்நுட்பங்கள் வருமாறு: பயறு வகைகளில் மகசூல் அதிகரிக்க 2 சதவீத டிஏபி கரைசல் தெளிக்க வேண்டும். இதன்படி, ஒரு ஏக்கருக்கு 4 கிலோ டிஏபி உரத்தை 10 லிட்டர் சுத்த மான நல்ல தண்ணீரில் இரவு முழுவதும் ஊற வை க்க வேண்டும். பின்பு கா லையில் நன்றாக தெளிந்து மேலாக இருக்கும் தண்ணீ ரை வடிகட்ட வேண்டும். சுமார் 8 லிட்டர் கரைசல் கிடைக்கும். அதை 192 லிட் டர் சுத்தமான நல்ல தண் ணீரில் கலந்து கைத்தெளிப் பான் மூலம் தெளிக்க வேண்டும். இந்த கரைசலை பூக்கும் சமயத்தில் ஒரு முறையும் காய் பிடிக்கும் தருணத்தில் மறுமுறையும் காலை அல் லது மாலை

நேரத்தில் கைத்தெளிப்பான் கொ ண்டு தெளிக்க வேண்டும். இதன் மூலம் அதிக அளவில் பூக் கள் ஒரே சீராக பூக்கும். மே லும் காய்கள் திரட்சியாக காய்க்கும். 20 சதவீதம் வரை கூடுதல் மகசூல் கிடைக்கும். கரைசலை வெ யில் நேரத்தில் தெளித் தால் எதிர்பார்த்த பயன் கிடை க்காது. பயறு வகை பயிர்களில் பூக்கின்ற பூக்களில் 25 சத வீதம் காய்களாக மாறுகின் றன. பூச்சி மற்றும் நோய் தாக்குதல், நுண்ணூட்டச்சத்து பற்றாக்குறை, கடுமை யான வறட்சி, நீர் தேங்குதல், காற்றின் வேகம் அதிகமாக இருத்தல் போன்ற காரண ங்களால் பூக்கள் அதிகமாக உதிர்கின்றன. இதனை தடுக்க பயிர் ஊக்கியான நாப்தலின் அசிட்டிக் அமில த்தை பயிர்களில் தெளிக்க வேண்டும். இக்கரைசலை தயாரிக்க 1.6மிலி பிளானோபிக்ஸ் மருந்தினை 1.8 லிட்டர் தண்ணீரில் கலக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு 100 லிட்டர் கரைசல் தேவைப்படும். இக்கரை சலை பூக்கும் தருணத்திலும் 15 நாட்களுக்குப் பின் மறுமுறையும் தெளிக்க வேண்டும். பூக்கள் உதிர்வ தை தடுப்பதினால் 10 முதல் 20 சதவீதம் மகசூல் அதிகரிக்கும். மேலும் பயறு வகை பயி ர்களில் உற்பத்தியை பெரு க்க நெல்லுக்குப்பின் தனிப்பயிராகவோ மற்றும் இதரப்பயிர்களில் வரப்பு பயி ராகவோ சாகுபடி செய்து உபரி வருமா னம் பெறலாம். இவ்வாறு வேளாண் அதிகாரிகள்தெரிவித்துள்ளனர்.

**<u>விவசாயிகளுக்கு மரக்கன்று வழங்கல்</u>**

சிவகங்கை, : கல்லல் அருகே வெற்றியூரில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை, ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டம் சார்பில் விவசாயிகளுக்கு பழ மரக்கன்று வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. மா, நெல்லி, சப்போட்டா உள்ளிட்ட கன்றுகளை ஊராட்சித்தலைவர் உதயகுமார் விவசாயிகளுக்கு வழங்கினார். நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை துணை இயக்குநர் செல்வப்பாண்டி விவசாயிகளுக்கு பழ மரக்கன்று நடவு குறித்தும், உதவி பொறியாளர் நவசக்தி

பண்ணைக்குட்டைகளில் மீன்குஞ்சு வளர்ப்பு குறித்தும் விளக்கம் அளித்தனர்.

**<u>பூச்சிக்கொல்லி மருந்துகள் மானிய விலையில் விற்பனை</u>**

அறந்தாங்கி, : அறந்தாங்கி வட்டாரத்தில் சம்பா நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் பூச்சிக்கொல்லி மருந்துகள் விற்பனை செய்யப்படுவதாக வேளாண் உதவி இயக்குநர் பொன் னையா தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளி யிட்ட செய்திக்குறிப்பு: அறந்தாங்கி வட்டாரத்தில் தற்போது சம்பா நெல் சாகுபடி பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன. மேலும், வானம் மேக மூட்டத்துடனும் மந்த மான சூழ்நிலையிலும் காணப்படுவதால் சம்பா நெல் சாகுபடி பயிர்களில் குலை நோய்த் தாக்க வாய்ப்புகள் உள்ளன. தாக்குதலுக்கு உள்ளான வயல்களில் இலைகளின் மேல் சிறிய பழுப்பு நிற புள்ளிகள் உண்டாகும். புள்ளிகள் பெரிதாகும் போது 2 பக்கங்களிலும் விரிவடைந்து கண் வடிவத்தைப் பெறுகிறது. ஓரங்கள் பழுப்பு நிறமாகவும், உட்பகுதி சாம்பல் நிறமாகவும் காணப்படும். இலை மட்டுமன்றி தண்டு மற்றும் நெற்கதிரை தாக்குகின்றது. தண்டின் கணுக்களை தாக்கும் போது பழுப்பு நிற புள்ளிகள் தோன்றுகின்றன. புள்ளிகள் பெரிதாகும் போது திசுக்கள் அழுகி ஒடிந்து விடும். கழுத்து பகுதியை தாக்கும் போது கதிரை தாங்க முடியாமல் தண்டு ஒடிந்து விடும். இதை கட்டுப்படுத்த நடவு வயலில் நட்ட 30ம் நாள் ஏக்கருக்கு 1 கிலோ சூடோமோனஸ் 20 கிலோ எருவுடன் கலந்து இடவேண் டும். நோய் கண்டவுடன் ஏக்கருக்கு 1 கிலோ சூடோ மோனஸ் 20 லிட்டர் நீருடன் கலந்து கைத்தெளிப்பானால் தெளிக்கவேண்டும். பூஞ்சான் கொல்லி மருந் தான கார்பென்டசின் 200 கிராம் அல்லது டிரைசைக்ளோசோல் 120 கிராம் அல்லது ஹெக்சனசோல் 5 இ.சி. 400 மி.லி. இவற்றில் ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்கவேண்டும். பூஞ்சாண கொல்லி மருந்துகள் வேளாண் விரிவாக்க மைய கிடங்குகளில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. எனவே, விவசாயிகள்

மானிய விலையில் பூச்சிக் கொல்லி மருந்துகளை வாங்கி பயன்பெறலாம் என்றார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

### காட்டுமன்னார்கோவில், குமராட்சி பகுதியில் தொடர் மழையால் நெற்பயிரில் நோய் தாக்குதல்

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் குமராட்சி பகுதியில் கடந்த 60 தினங்களாக விட்டு, விட்டு தொடர்ந்து மழை பெய்தது. இரவில் குளிர் இருப்பதால் காற்றில் ஈரப்பதம் அதிகமாக உள்ளது. இதன் காரணமாக இந்த பகுதிகளில் பயிரிடப்பட்டு தற்போது வளர்ச்சி நிலையிலும், தண்டு உருளும் நிலையிலும், பூ வரும் நிலையிலும் நெற்பயிர்கள் உள்ளது. இதில் புகையான் மற்றும் இலை சுருட்டு புழுக்கள் ஆகியவை தாக்கி வருகின்றன. இதனால் விவசாயிகள் பெரிதும் அதிர்ச்சியடைந்துள்ளனர். இலை சுருட்டு புழு தாக்கப்பட்ட வயல்களில் உள்ள பயிர்களின் இலையில் பச்சை நிற திசுக்களை சுரண்டி புழுக்கள் உண்பதால் இலைகள் வெண்மையாக காணப்படும். மேலும் இலையின் நீள வாட்டில் சுருண்டு புழுக்கள் அதன் உள்ளே இருக்கும். இதே போன்று புகையான் தாக்கி வயல்களில் உள்ள பயிர்கள் வெண்மை நிறத்தில் அதிக அளவு காணப்படும். இவ்வாறு தாக்கப்படும் வயல்களில் வேளாண்மை உதவி இயக்குநர்கள் காட்டுமன்னார்கோவில் கனகசபை, குமராட்சி விஜயகுமார் ஆகியோர் தொடர்ந்து ஆய்வு பணி மேற்கொண்டனர். மேலும் பூச்சிகளை கட்டுப்படுத்த மருந்துகளை சிபாரிசு செய்துள்ளனர். இதன்படி இலை சுருட்டு புழு தாக்கிய வயல்களில் ஒரு ஏக்கருக்கு குளோரி பைரிபாஸ் 500 மிலி அல்லது அசிபேட் 400 கிராம், அல்லது தையமீத்காசம் 400 கிராம் அல்லது புளுபெண்டி¬ட் 400 மிலி, அல்லது டிரைசோபாஸ் 400 மிலி, அல்லது புரபனோபாஸ் 400 மிலி, இதில்

ஏதேனும் ஒரு மருந்தை 200 லிட்டர் நீரில் கரைத்து கைத்தெளிப்பான் மூலம் தெளித்து கட்டுப்படுத்தலாம். புகையான் பூச்சிகளை கட்டுப்படுத்த வயலில் நன்கு நீரை வடிகட்ட வேண்டும். யூரியா இடுவதை தாமதப்படுத்த வேண்டும். பயிரை 4 அடி பட்டங்களாக விலக்கி காற்றோட்டம் உள்ளவாறு பராமரிக்க வேண்டும். மேலும் டைகுளோர்வாஸ் 300 மிலி அல்லது அசிபேட் 300 மிலி அல்லது இமிடாகுளோபிரைடு 100 மிலி அல்லது மானோகுரோட்டோபாஸ் 500 மிலி ஆகியவற்றை ஏதேனும் ஒன்றை 200 லிட்டர் தண்ணீரில் கலந்து பயன்படுத்த வேண்டும். பாக்டீரியா இலை கருகல் நோய் பாதித்த வயல்களில் இலைகள் நுனி மஞ்சளாகி இலை ஓரங்களில் கரு நிற புள்ளி உருவாகி, இலையின் கருகி பின்பு சாம்பல் நிறமாக மாறிவிடும். இந்நோயை காட்டுப்படுத்த காப்பர் ஹைட்ராக்சைடு 250 கிராம், மற்றும் ஸ்டப்டோ சைக்கிளின் 20 கிராம் ஆகியவற்றை கலந்து நோயை கட்டுப்படுத்த வேளாண்மை உதவி இயக்குநர்கள் அறிவுறுத்தி உள்ளனர்.

## <u>பண்ருட்டி பகுதியில் மஞ்சள் சாகுபடி தீவிரம்</u>

பண்ருட்டி, : பண்ருட்டியை அடுத்த திருவதிகை முழுவதும் உள்ள பகுதிகளில் 20 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களில் மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. இங்கு விளையும் மஞ்சள் பண்ருட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள கிராமங்களில் பொங்கல் திருநாளில் பொங்கல் பானை மீது சுற்றி பொங்கலிடுவதை மரபாக கொண்டுள்ளனர். இப்பகுதியில் விளையும் மஞ்சள் கிழங்கு விதைகள் புதுவை, திருக்கனூர் பகுதியில் கிலோ ரூ.80க்கு வாங்கி வந்து விதைக்கின்றனர். கடந்த ஆண்டைவிட தற்போது மஞ்சள் விவசாயம் விளைச்சல் அமோகமாக உள்ளது. இப்பகுதியில் இதுபோன்ற விவசாயம் செய்வதற்கு விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். குறைந்த செலவில் அதிகளவு லாபம் ஈட்டக்கூடிய பயிர் இது என்பதால் சேலம், ஆத்தூர் பகுதியில் அதிகளவு விவசாயம் செய்யப்படுகிறது. பண்ருட்டி பகுதிகளில் குறைந்த

செலவாகும் என்பதால் விவசாய பெண்கள் இதில் அதிக அளவில் ஈடுபடுகின்றனர். வேளாண்மை துறை அதிகாரிகளை கொண்டு சிறப்பு கூட்டம் கூட்டி ஆலோசனைகள் வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சியருக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பணகுடி குத்தரபாஞ்சான் அருவியில் தண்ணீர் வரத்து அதிகரிப்பு

பணகுடி, : பணகுடி குத்தரபாஞ்சான் அருவி மற்றும் கன்னிமாரன் தோப்பு ஓடை ஆகியவற் றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலா பயணிகள் குடும்பத்துடன் இங்கு வந்து உற்சாகமாக குளிக்கின்றனர். பணகுடி மேற்கு தொடர்ச்சி மலையில் குத்தரபாஞ்சான் அருவி மற்றும் கன்னிமாரன் தோப்பு ஓடை உள்ளது. இங்கு ஆண்டு தோறும் மழைக் காலங்களில் அருவி மற்றும் ஓடையில் வெள்ளம் பாயும். கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் இருந்து ஆண்டு தோறும் பல ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் இங்கு வந்து அருவி மற்றும் ஓடையில் குளித்து மகிழ்வர். கடந்த வாரம் பெய்த தொடர் மழையால் அருவி மற்றும் கன்னிமாரன் தோப்பு ஓடை ஆகியவற்றில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. வார விடுமுறை நாட்களான சனி மற்றும் ஞாயி றன்று சுற்றுலா பயணிகளின் அதிக அளவில் இங்கு வந்து குதூகலத்துடன் குளித்து விட்டு சென்றனர். கடந்த ஆட்சி யில் இந்த பகுதி சுற்றுலாத் தலமாக தமிழக அரசால் அறிவிக்கப்பட்டு சாலை வசதி உடைமாற்றும் அறை மற்றும் பொதுக் கழிப்பிடம் ஆகியவை கட்டி முடிக்கப்பட்டன. தற்போது இவை அனைத் தும் உடைக்கப்பட்டு கதவுகள் எதுவும் இல்லா மல் மோசமான நிலையில் உள்ளது. பேரூராட்சி நிர்வாகத்தினர் இதனை சரி செய்து இங்கு வரும் மக்களுக்கு வசதிகளை மேம்படுத்தி தர வேண்டும் என்று சுற்றுலா பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# கரூர் மாவட்டத்தில் பெருநகர காய்கறி உற்பத்தி வளர்ச்சி திட்டம் ரூ.1 கோடியில் செயல்படுத்தப்படும்



கரூர் மாவட்டத்தில் பெருநகர காய்கறி உற்பத்தி வளர்ச்சி திட்டம் ரூ.1 கோடியில் செயல்படுத்தப்படும் என்று கலெக்டர் ஜெயந்தி கூறினார்.

கூட்டம்

திருச்சி பெருநகர காய்கறி குழு வளர்ச்சித் திட்ட விளக்கக் கூட்டம் கரூர் மாவட்ட கலெக்டர் ஜெயந்தி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கலெக் டர் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

கரூர் மாவட்டத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெருநகர காய்கறி உற்பத்திக்குழு வளர்ச்சித் திட்டம் 2014-15-ம் ஆண்டில் ரூ.1 கோடியே 17 லட்சத்து 35 ஆயிரம் மதிப்பீட்டில் கரூர் மாவட்டத்தில் செயல் படுத்தப்பட உள்ளது. இத் திட்டத்திற்காக 15 முதல் 20 விவசாயிகளைக் கொண்ட 50 குழுக்கள் 8 வட்டாரங்களிலும் அமைக்கப் படவுள்ளது. அவர் களுக்கு காய்கறி சாகுபடி செய்யும் தொழில்நுட்ப பயிற்சி அளிக்கப்பட்டு திறந்த வெளியில் உயர்விளைச்சல் ரக காய்கறி பயிர்கள் 40 எக்டேர் பரப்பிற்கும், வீரிய ஒட்டு ரக காய்கறி சாகுபடி 140 எக்டேர் பரப்பிற்கும், அக்குழுவில் உள்ள விவசாயிகளுக்கு தோட் டக்கலை துறையின் மூலம் மானியம் வழங்கப்படும்.

மொத்தவிற்பனை

இக்குழு மூலம் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறிகளை கரூர் மாவட்டத்தில் 5 இடங்களில் உள்ளூர் விற்பனை நிலையம் அமைத்து, சில்லரை விலையில் விற்பனை செய்தது போக மீதமுள்ள காய்கறிகளை திருச்சியில் உள்ள காந்தி தினசரி காய்கறி அங்காடிக்கு குழுவினரே எடுத்து சென்று மொத்த விற்பனை செய்வதற்கும், வங்கி நிதி உதவியுடன் வேன் வாங்க மான்யமும் வழங்கப்பட உள்ளது. குழு உறுப்பினர்களை

மகளிர் திட்டம், புதுவாழ்வு திட்டம் ஆகிய துறை களப்பணியாளர் களுடன் தோட்டக்கலை களப்பணி யாளர்களும் இணைந்து தேர்வு செய்ய வேண்டும். இத்திட்டம் வெற்றியடைய உயர் விளைச்சல் மற்றும் வீரிய ரக காய்கறி விதைகளை பகுதிக்கு ஏற்றவாறு விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கிட தோட்டக்கலை துணை இயக்குனர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்பு கொண்டு பயன்பெறலாம் எனவே, இத்திட்டத்தில் குழுக்கள் மூலம் இணைந்து காய்கறி பயிர்கள் சாகுபடி செய்ய விருப்பம் உள்ள விவசாயிகள் சம்பந்தப்பட்ட வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார். முன்னதாக தோட் டக்கலை துணை இயக்குனர் கோ.வளர்மதி திட்ட செயல் பாடுகள் குறித்து அனைத்து துறை அலுவலர்களுக்கும் விளக்கம் அளித்தார். இக் கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அருணா, வேளாண்மை இணை இயக்குனர் தெய்வேந்திரன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் சந்தானம், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராஜேந்திரன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் முருகேசன், திருச்சி மாவட்ட வேளாண் விற்பனைக் குழுவின் ஆய்வாளர் குமாரசாமி, கரூர் வருவாய் கோட்டாட்சியர் கார்த்திகேயன், மாவட்ட மகளிர் திட்ட உதவி திட்ட அலுவலர் லட்சுமணன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் செந்தமிழ்ச்செல்வி மற்றும் அனைத்து வட்டார தோட் டக்கலை உதவி இயக்குநர்கள் கலந்து கொண்டனர்.

## <u>பண்ணைக்குட்டை பணிகளை விரைந்து முடிக்க வேண்டும் கலெக்டர் உத்தரவு</u>



நாமக்கல், திருச்செங்கோடு, பள்ளிபாளையத்தில், பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணி களை கலெக்டர் தட்சிணாமூர்த்தி ஆய்வு செய்தார். அப்போது அவர் பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிட்டார்.

கலெக்டர்ஆய்வு

திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம் மற்றும் பள்ளிபாளை யம் ஊராட்சி ஒன்றியங்களில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் முடிக்கப்பட்ட பண்ணைக் குட்டைகள் மற்றும் மரக்கன்றுகள் நட்டு வளர்க்கும் பணிகள் குறித்த ஆய்வு நடைபெற்றது. மாவட்ட கலெக்டர் தட்சிணா மூர்த்தி இந்த பணிகளை ஆய்வு செய்தார். திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியம் டி.கவுண்டம்பாளை யம் ஊராட்சியில் சின்னாக் கவுண்டன் குட்டை ரூ.4.88 லட்சம் மதிப்பீட்டில் ஆழப் படுத்துதல் மற்றும் அதன் அருகில் உள்ள ஓடையை தூர்வாரி செம்மைப்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டு அந்த குட்டையில் முழுமையாக நீர்தேங்கி உள்ளதை கலெக்டர்ஆய்வுசெய்தார்.

பள்ளிபாளையத்தில்...

தொடர்ந்து பள்ளிபாளை யம் ஊராட்சி ஒன்றியம் காடச்சநல்லூர் ஊராட்சியில் ரூ.5.10 லட்சம் மதிப்பீட்டில் களரங்காடு வரத்துக் கால்வாய் தூர்வாரி ஏரிக்கு நீர்வரத்து வருவதற்காக அமைக்கப்பட்டு உள்ள இடத்தையும், ஓடப் பள்ளி அக்ரஹாரம் ஊராட்சி யில் பொன்னி சுகர்ஸ் குடி யிருப்பு பின்புறம் முதல் பூச்சக்காடு வரை சாலையின் இருபுறமும் ரூ.1.50 லட்சம் மதிப்பீட்டில் 500 மரக்கன்று கள் நட்டு பராமரிக்கப்பட்டு வருவதையும் கலெக்டர் ஆய்வு செய்தார். பின்னர் பள்ளிபாளையம் அக்ரஹாரம் ஊராட்சியில் ரூ.14.35 லட்சம் மதிப்பீட்டில் தாண்டாங்காடு முதல் மாம் பாளையம் வரையில் உள்ள ஓடை ஆழப்படுத்தும் பணி பள்ளிபாளையம் அக்ரஹாரம் மாம்பாளையம் ஓடையில் ரூ.7.50 லட்சம் மதிப்பீட்டில் பாலம் அமைத்து தடுப்புச்சுவர் கட்டி முடிக்கப்பட்டு உள்ள பணியையும், இந்த ஓடையில் ரூ.1.80 லட்சம் மதிப்பீட்டில் தடுப்பணை கட்டுப்பட்டு ஓடையில் நீர் முழுமையாக நிறைந்து உள்ளதையும் கலெக்டர்ஆய்வுசெய்தார்.

விரைந்துமுடிக்கஉத்தரவு

இந்த ஆய்வின்போது அனைத்து பணிகளையும் விரைந்து முடிக்க வேண்டும் என அவர் உத்தரவிட்டார். இந்த ஆய்வின்போது பள்ளி பாளையம் ஊராட்சி ஒன்றிய குழுதலைவர் செந்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை உதவி செயற்பொறி யாளர் ராஜேஸ்வரி, பள்ளி பாளையம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சிட்டிபாபு, கந்தசாமி, ஒன்றிய மேற்பார்வை யாளர்கள் வாஞ்சிநாதன், முத்துக்குமார், திருச்செங் கோடு ஊராட்சி ஒன்றிய வட் டார வளர்ச்சி அலுவலர்கள் ராஜமாணிக்கம், தமிழ்செல்வி உள்பட பலர் உடன் சென்றனர்.

**<u>தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு திட்டத்தில் ரூ.100 கோடி இழப்பீடு கலெக்டர் தகவல்</u>**



தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீட்டு திட்டத்தில் ரூ.100 கோடி இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டு உள்ளது. இது குறித்து மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

இழப்பீடு

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த 2012–13–ம் ஆண்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு திட்டத்தின் கீழ் இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டு உள்ளது. அதன்படி தூத்துக்குடி மாவட்டத்தில் மொத்தம் 47 ஆயிரத்து 862 விவசாயிகளுக்கு ரூ.100 கோடியே 3 லட்சத்து 68 ஆயிரத்து 191 இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டு உள்ளது.

பயிர்கள்

மாவட்டத்தில் சோளம் பயிருக்கு ரூ.3 கோடியே 43 லட்சத்து 18 ஆயிரத்து 948–ம், கம்பு பயிருக்கு ரூ.6 கோடியே 11 லட்சத்து 91 ஆயிரத்து 494–ம்,

மக்காச்சோளம் பயிருக்கு ரூ.72 கோடியே 64 லட்சத்து 378 ஆயிரத்து 600–ம, உளுந்து பயிருக்கு ரூ.9 கோடியே 51 லட்சத்து 42 ஆயிரத்து 242–ம், பாசிப்பயறுக்கு ரூ.6 கோடியே 80 லட்சத்து 98 ஆயிரத்து 925–ம், எள்ளுக்கு ரூ.9 லட்சத்து 59 ஆயிரத்து 380–ம், சூரியகாந்தி பயிருக்கு ரூ.1 கோடியே 42 லட்சத்து 3 ஆயிரத்து 529–ம், நெற்பயிருக்கு ரூ.16 ஆயிரத்து 520–ம் இழப்பீடு தொகை வழங்க உத்தரவிடப்பட்டு உள்ளது. இதற்கான நிதி விரைவில் ஒதுக்கீடு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. இவ்வாறு மாவட்ட கலெக்டர் ம.ரவிகுமார் கூறினார்.